வாரத்தேர்வு wkly E5 / 1

இயல் : 5 மதராசப்பட்டினம், தெய்வமணிமாலை

மதிப்பெண் : 10 வகுப்பு : 12 நேரம் : 15 நிமிடம்

**ஒரு மதிப்பெண் வினா** 2 X 1 = 2

1. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்"- இத்தொடர் உணர்த்தும் பண்பு **( ஆகஸ்ட் 2022 )**

**அ)** நேர்மறைப் பண்பு **ஆ)** எதிர்மறைப் பண்பு **இ)** முரண் பண்பு **ஈ)** இவை அனைத்தும்

2. இந்தியாவின் முதல் பொது நூலகம் எது ? **(மார்ச் 2023)**

**அ)** மஹால் நூலகம் **ஆ)** உவேசா அலுவலகம் **இ)** கன்னிமாரா நூலகம் **ஈ)** காமராசர் நூலகம்

**குறுவினா** 2 X 2 = 4

3.கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக. **( பெ.ஆ.க. 6 , மார்ச் 2024 )**

4. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்துள்வளர் தலமோங்கு கந்தவேளே" தொடருக்குப் பதவுரை எழுதுக. ( **செப் 2021 )**

**மனபாடப்பாடலை அடிமாறாமல் எழுதுக.** 1 X 4 = 4

5. " ஒருமையுடன் ......" எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை எழுதுக. **( பெ.ஆ.க. 2 , செப் 2021 , மார்ச் 2023 )**

குருசடி எம். ஏ. ஜெலஸ்டின் , 9843448095

---

## விடைகள்

**ஒரு மதிப்பெண் வினா** 2 X 1 = 2

1.இ) முரண் பண்பு

2.இ) கன்னிமாரா நூலகம்

---

**குறுவினா** 2 X 2 = 4

**3.கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் :**

காலின் மெக்கன்சியின் தொகுப்புகளை அடிப்படையாகக் கொண்டு 1869 இல் உருவாக்கப்பட் டது. இதில் அரிய ஓலைச்சுவடிகள், தாள்சுவடிகள், புத்தகங்கள் எனப் பெரும் தொகுப்புகளைக் கொண்டது.

---

**4. தொடருக்கான பதவுரை :**

| | | |
|---|---|---|
| தருமமிகு சென்னையில் | - | அறம் செய்வார் நிறைந்திருக்கும் சென்னையில் |
| கந்த கோட்டத்துள்வளர் | - | கந்தகோட்டத்துத் திருக்கோவிலில் |
| தலமோங்கு கந்தவேளே | - | எழுந்தருளியிருக்கும் கந்தவேளே |

---

**மனபாடப்பாடலை அடிமாறாமல் எழுதுக.** 1 X 4 = 4

5.
ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவுவேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகல வாமைவேண்டும்
பெருமைபெறும் நினதுபுகழ் பேசவேண்டும் பொய்மை
பேசா திருக்கவேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்கவேண்டும்

குருசடி எம். ஏ. ஜெலஸ்டின் , 9843448095

---